பக்கங்கள் 12,6

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை 16.04.2024 அதிர்வு 260

# மூன்று நாள்களில் 23 பேர் உயிரிழப்பு

## 20 வாகன விபத்துக்கள் பதிவு

சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற 20 வாகன விபத்துக்களில் 23 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன், 134 பேர் காயம் அடைந்துள்ளனர். 04

# ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கவும் முடியாது! சிங்கள வேட்பாளர்களை நாங்கள் நம்பவும் முடியாது!!

## தமிழ்ப் பொது வேட்பாளர் வேண்டும் என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றார் ஶ்ரீநேசன்

(வவுணதீவு திருபர்)

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடம் பலவித மான கருத்துக்கள் பரவுகின்றன. அந்த வகையில் ஒரு சாரார் இந்தத் தேர்தலை நிரா கரிக்க வேண்டும், வாக்களிப்பைப் புறக் கணிக்க வேண்டும் என்கின்ற கருத்துக் களைத் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பி வரு கின்றனர். இந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள்



# பொது வேட்பாளர் சாத்தியம் இல்லை என்ற முடிவை தமிழர்கள் எடுப்பார்கள்



## இராஜாங்க அமைச்சர் மஸ்தான் நம்பிக்கை ரணிலுக்கே தான் ஆதரவு என்றும் அறிவிப்பு

(கே.வசந்தன்)

“தமிழ்க் கட்சிகள், அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் புத்திஜீவிகள் என எல்லோரும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட் பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லை என்ற முடிவை எடுப்பார்கள் என எண்ணுகின்றேன்.”

- இவ்வாறு கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ்தான் தெரிவித்தார். 04

# காதலியையும் தாயையும் கொடூரமாக வெட்டிவிட்டு உயிர்மாய்த்த இளைஞர்

## இளவாலையில் இன்று அதிகாலை பரபரப்பு

இளைஞர் ஒருவர் தனது காதலி யையும், காதலியின் தாயையும் கூரிய ஆயுதத்தால் வெட்டிய பின்னர் தனது உயிரை மாய்த்துள்ளார்.

யாழ். இளவாலைப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பனிப்புலம் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த 35 வயதான குணதிலகம் பிரணவன் எனும் இளைஞரும், அந்தப் பகுதி யைச் சேர்ந்த யுவதியும் காதலித்து வந்துள்ளனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாகக் காதலர்களுக்கிடை யில் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் இன்று அதிகாலைவேளை 04









## வவுனியாவை இன்று வந்தடைந்த

# அன்னை பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திக்கு மக்கள் அஞ்சலி!

**(கே.வசந்தன்)**

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி இன்று வவுனியாவை வந்தடைந்த நிலையில் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அன்னை பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வடக்கு – கிழக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள நிலையில் இன்று வவுனியாவை வந்தடைந்தது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டப் பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக ஊர்தி நிறுத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பொங்குதமிழ் நினைவுத் தூபி, பண்டார வன்னியன் நினைவுச் சதுக்கம், கோவில்குளம், ஈச்சங்குளம், வவுனியா வடக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் சென்றதுடன், அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத் தலைவி கா.ஜெயவனிதா ஈகைச்சுடரை ஏற்றி வைத்ததுடன், தாய்மாரால் மலர் மாலை அணிவித்ததையடுத்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.













# நாட்டை மீட்பதா, இல்லையா என்று மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு





தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதா அல்லது தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மேலும் வங்குரோத்து ஆவதா என்பதை இம்முறையும் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

புத்தாண்டு காலத்தில், நாட்டில் பாதி பேர் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர்.

புத்தாண்டு ஆகாரங்களைக் கூட சரியாக தயார் செய்ய முடியாமல் பலர் உள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துத் தொழிற்சாலைகள் மூடப்படுவதால் நாட்டின் பெரும்பாலான மக்கள் கடுமையான அழுத்தத்தில் நாளாந்த வாழ்க்கையை கடத்தி வருகின்றனர்.

இந்நாட்டில் 50 வீதம் பேர் நிர்க்கதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் போது எல்லாம் சரியாகிவிட்டது என்று கூறுபவர்கள் இருந்தாலும், அரசால் உருவாக்கப்பட்ட இந்த இயல்பு நிலை மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 156 ஆவது கட்டமாக 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், அம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (15) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கல்லூரியின் நடனம், வாத்தியம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஒரு லட்சம் ரூபா நிதியையும் நன்கொடையாக வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி மக்கள் சார், மனிதாபிமான உடன்படிக்கையுடன் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அபிவிருத்தி யுகத்தை ஆரம்பிப்பதன் மூலம் அடுத்த வருட புத்தாண்டைக் கொண்டாட நடவடிக்கை எடுப்போம்.

ஏலவே இது தொடர்பான திருத்தங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியுள்ளோம். பொருளாதாரத்தைச் சுருக்கும் தீர்வுகளுக்கு பதிலாக அனைவருக்கும் நலனையும் சௌபாக்கியத்தையும் கொண்டு வரும் பொருளாதார விரிவாக்கமே நமக்கு இங்கு தேவைப்படுகிறது.

2019 ஆம் ஆண்டைப்போல மீண்டும் மக்கள் ஏமாந்து விடக்கூடாது. 5 வருடங்களுக்கு முன்னர் மக்களை ஏமாற்றி இன்று நாடே வங்குரோத்து நிலைக்கு ஆளாகிவிட்டது.

தற்போதுள்ள வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதா அல்லது தற்போதுள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மேலும் வங்குரோத்து ஆவதா என்பதை இம்முறையும் மக்களே தீர்மானிக்க வேண்டியுள்ளது.

குறுகிய மனப்பான்மையைக் காட்டிலும் சர்வதேச தொழிலாளர் சந்தையின் தேவைக்கேற்ப எமது பாடத்திட்டம் சீர்திருத்தப்பட்டு, மூடிய நிலையில் இருந்து பரந்த அனுகலை சாத்தியப்படுத்தும் நாடாக இலங்கை மாற வேண்டும்.-என்றார்.

# இத்தாலி பயணிகள் கப்பல் இலங்கையை வந்தடைந்தது

இத்தாலிக்குச் சொந்தமான கொஸ்டா டெலிசியோசா என்ற சொகுசு ரக பயணிகள் கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் ஆயிரத்துத் 978 பயணிகளும், 906 பணிக் குழாமினரும் நாட்டை வந்தடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பல் ஊடாகப் பிரிட்டன், ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று (15) வருகை தந்துள்ளனர்.

அவர்கள் காலி மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் சுற்றுலாவில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணிகள் கப்பல் மாலைதீவு நோக்கிச் செல்லவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தீ

## புத்தகங்கள், உபகரணங்கள் எரிந்து நாசம்





(ஆ.ரமேஷ்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன், கல்கந்தை தோட்டப் பிரிவில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இன்று அதிகாலை 2 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மின்சாரக் கசிவால் இந்தத் தீ பரவல் ஏற்பட்டதா அல்லது எவரேனும் குறித்த நிலையத்துக்குத் தீ வைத்துள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மக்கள் குடியிருப்பு அமைந்துள்ள பகுதிக்கு அருகாமையிலேயே குறித்த சிறுவர் அபிவிருத்தி நிலையம் காணப்படுகின்றது.

தீ பரவலையடுத்து பிரதேச மக்கள் கடும் போராட்டத்துக்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இதனால் பகுதியளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளதுடன், சிறார்களின் புத்தகங்கள், உபகரணங்கள் உள்ளிட்டவை எரிந்து தீக்கிரையாகியுள்ளன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொதுவே வட்பாளர்...

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிப்பது தொடர்பாக வவுனியாவில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் ஒக்டோபர் மாதம் முதலாம், இரண்டாம் கிழமைகளில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதன் காரணமாக இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

என்னைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு வெற்றியடைவார் என்றால் பரவாயில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை தேசியக் கட்சியைச் சார்ந்த ஒருவரே வெற்றி பெறுவார்.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் ஆதரிக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடைய வைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம்.

மேலும் தமிழ் தரப்பில் பொது வேட்பாளர் என்ற விடயம் எந்த விதத்தில் சாத்தியம்? இதன் ஊடாக என்ன நன்மை கிடைக்கும்? என்று எமக்குத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் ஏதோவொரு பிரதான வேட்பாளர் ஒருவரையே தமிழர்கள் ஆதரித்துள்ளனர். அதுவே இம்முறையும் சரியானதாக அமையும் என நான் எண்ணுகின்றேன்.

தமிழர்கள் ஒருமித்த கருத்துடன் ஒரு ஜனாதிபதி வேட்பாளரைப் போடுவதன் மூலம் வெற்றியை நோக்கிச் செல்வதாக இருந்தால் பரவாயில்லை. ஆனால், அது சாத்தியமில்லை.

எனவே, தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற முயற்சி ஏன் ஏற்பட்டுள்ளது என்பது புரியவில்லை. மேலும், தமிழ்க் கட்சிகள், அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் புத்திஜீவிகள் என எல்லோரும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லை என்ற முடிவை எடுப்பார்கள் என எண்ணுகின்றேன்." – என்றார்.

### காதலியையும்...

காதலியின் வீட்டுக்குச் சென்று மறைந்திருந்த இளைஞர், வீட்டார் காலை வீட்டின் கதவைத் திறந்த வேளை, நுழைந்து காதலியையும், அவரது தாயையும் கூரிய ஆயுதத்தால் வெட்டி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சத்தம் கேட்டுக் கூடிய அயலவர்கள், பாரிய வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட தாயையும் மகளையும் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதையடுத்து வீட்டில் இருந்து சற்றுத் தொலைவில் இருந்த காணி ஒன்றில் மேற்படி இளைஞர் தனது உயிரை மாய்த்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### மூன்று நாட்களில்...

ஏப்ரல் 12 முதல் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்த விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் (14) மாத்திரம் வாகன விபத்துக்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, பட்டாசு வெடித்தல் உட்பட பண்டிகை காலத்தில் இடம்பெறும் திடீர் அனர்த்தங்களின் எண்ணிக்கை இம்முறை குறைவடைந்துள்ளது.



# தீப்பிடித்து விபத்துக்குள்ளான இராஜாங்க அமைச்சரது கார்!



இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவின் கார் திடீரென தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் பண்டாரவளை ஹல்பே பகுதியில் இன்று (16) அதிகாலை 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

சாமர சம்பத் தசநாயக்க மஹியங்கனையிலிருந்து எல்ல பிரதேசத்துக்குப் பயணித்துக் கொண்டிருந்த போதே பண்டாரவளை ஹல்பே பகுதியில் கார் திடீரென தீப்பிடித்துள்ளது.

எனினும், இந்த தீ விபத்தில் அமைச்சருக்கோ, சாரதிக்கோ காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பண்டாரவளை மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர் எல்ல பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

பெலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வாகனங்களை இறக்குவதற்கு ஏற்றவாறு பொருளாதாரம் இலங்கையில் இல்லை!

## சுட்டிக்காட்டுகின்றனர் ஆய்வாளர்கள்

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கையின் பொருளாதாரம் இன்னும் நல்ல நிலையில் இல்லை என்று பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் வெளிநாட்டு பணியாளர்கள் நாட்டுக்கு அனுப்பும் அந்நிய செலாவணியினால் பொருளாதாரம் குறிப்பிட்ட மட்டத்தில் உள்ளது என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார கற்கைகள் பிரிவின் பேராசிரியர் பிரியந்த துனுசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ரூபாயின் பெறுமதி ஓரளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது. எனினும் இதனை கொண்டு உடனடியாக வாகன இறக்குமதி செய்வது தவறான செயலாகும்.

அரசுக்குத் தேவையான வாகனங்களை இறக்குமதி செய்யும் போதும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கொள்வனவு செய்ய வேண்டும்.

நாட்டுக்குத் தேவையான வாகன இறக்குமதிகள் செய்தால் மீண்டும் நெருக்கடியான நிலைமை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று அவர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் படிப்படியாக வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஏற்கனவே விசேட குழுவொன்று தேவையான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொருளாதாரக் கடப்பாடு

பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் நாட்டின் எதிர்காலம் குறித்து - பொருளாதாரப் போக்குக் குறித்து - ஆசிய அபிவிருத்தி வங்கி முக்கிய எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

இலங்கையில் தேர்தல்கள் நடக்க இருக்கின்றன. அவற்றை ஒட்டி எழுந்துள்ள நிச்சயமற்ற தன்மை நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் கீழ்நோக்கிய போக்கை - வீழ்ச்சியை - சாத்தியமாக்கலாம் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டிருக்கின்றது.

இந்த ஆண்டின் கடைசிக் காலாண்டில் நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற உள்ளது. அந்தத் தேர்தல் நடந்த கையோடு அல்லது அடுத்த ஆண்டு நடுப் பகுதிக்குள் பொதுத்தேர்தல் நடக்கவிருக்கின்றது.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த இலங்கை, தக்க சமயத்தில் சர்வதேச நாணய நிதியம் தலையிட்டுப் பிணையெடுக்க முன்வந்தமையால் சற்று மூச்சு விட்டு நிமிரும் நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இலங்கையைப் பிணையெடுப்பதற்கு முன்வந்த சர்வதேச நாணய நிதியம் அதற்காகப் பரிந்துரைத்த பொருளாதாரக் கொள்கை போக்குகளை - நடவடிக்கைகளை - நடைமுறைகளை - இலங்கை அதிகார பீடம் ஏற்று, இணங்கி, முன்னெடுக்க முன்வந்தமையால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளும் வழிகாட்டலும் தொடர்ந்து கிடைக்கின்றன.

ஆனால், நாணய நிதியத்தின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படும் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் மக்களை நெருக்கடியில் ஆழ்த்துவனவாக - கஷ்டப்படுத்துவனாக - இருக்கின்றமையால் அவற்றை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இந்தப் பின்புலத்திலேயே தேர்தல்கள் வருகின்றன. தேர்தலில் ஏற்படக்கூடிய ஆட்சி மாற்றம் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுடனான பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலில் பாதிப்பை ஏற்படுத்தினால், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் சிக்கலுக்குள் மாட்டுவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்ற சாரப்படவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் எச்சரிக்கை அமைந்திருக்கின்றது.

சர்வதேசக் கடன் கொடுப்பனவு நிலுவைகளை மீளச் செலுத்த முடியாது என இலங்கை கை விரித்து இரண்டு ஆண்டுகளாகின்றன.

இந்த இரண்டு ஆண்டுகளில் நாடு செலுத்தியிருக்க வேண்டிய கடன் கடப்பாடுகள், தவணைக் கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள் எவற்றையுமே செலுத்தாமலேயே, கடனிறுக்க வழியற்ற - வக்கற்ற - நாடு என்று அவப்பெயரை சுமந்தவாறு நாடு தாண்டி வந்துவிட்டது.

கடன் மீளளிப்புக்கான ஏற்பாடுகளை மறுசீரமைத்து வருகிறோம் என்ற கதையை விட்டுக் கொண்டு இனியும் காலத்தை நாடு இழுத்தடிக்க முடியாது.

உள்நாட்டு - வெளிநாட்டு கடன் மீளளிப்புகள் தொடர்பில் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்து, அதற்கான ஒரு திகதியிலிருந்து அவற்றை நாம் மீளிக்கத் தொடங்க வேண்டும்.

அப்படிச் செய்தால்தான் சர்வதேச நாணய நிதியத்திற்கு அப்பால் இருந்தும் எமக்கு உதவிகள், வர்த்தக தொடர்பாடல்கள், பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகள் எல்லாம் புதிது புதிதாகக் கிட்டும். அப்படி கிட்டினால் மட்டுமே இப்போது நலிந்து கிடக்கும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த நமக்கு வாய்ப்பு கிடைக்கும்.

தக்க சமயத்தில் பிணையெடுக்க வந்து நாட்டையும் மக்களையும் மீட்க உதவிய சர்வதேச நாணய நிறுத்தியத்தை விமர்சித்து, அந்தச் செயற்திட்டத்தைக் குழப்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

தேர்தல்கள் வந்தாலும் - ஆட்சிகள் நிர்வாகங்கள் மாறினாலும் - ஒரு நாடு என்ற முறையில் இலங்கை பட்ட கடனை மீள செலுத்தும், வழங்கிய பொருளாதார உறுதிப்பாடுகளை அது நிறைவு செய்யும் என்ற நம்பிக்கையை தருவதும் மீளக் கட்டியெழுப்புவதும் நாட்டின் அரசியல் தலைமைத்துவங்களின் முக்கிய கடப்பாடாகின்றது.

பட்ட கடனை மீளச் செலுத்த மாட்டோம் என்று வங்குறோத்து நிலையைக் காரணம் காட்டும் பண்பியல்பிலிருந்து நாடு இயன்ற விரைவில் வெளியே வர வேண்டும்.

ஆட்சி மாறினாலும் - அதிகாரங்கள் மாறினாலும் - நிர்வாகம் மாறினாலும் - ஒரு நாடு என்ற முறையில் இலங்கை தான் அளித்த வாக்குறுதிகளிலிருந்து, பொருளாதாரக் கடப்பாடுகளில் இருந்து, வெளியேறி, விலகி, தப்பி ஓடிவிடாது என்ற முழு நம்பிக்கையை சர்வதேச சமூகத்திடம் நமது நாட்டின் சார்பில் நிரூபித்து ஒப்பிப்பது நமது கடமையாகின்றது.



# டெனிஸ் விளையாட்டு மைதானம் அம்பாறையில் திறந்து வைப்பு!

**(அஸ்ஹர் இப்ராஹிம்)**

அம்பாறை மாவட்ட டென்னிஸ் விளையாட்டு மைதானம் அம்பாறையில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டம் அம்பாறை பிரதிப் பொலிஸ்மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ மற்றும் மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி ஆகியோரின் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டீ.வீரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை டென்னிஸ் சங்கத்தின் தலைவர் இக்பால் பின் இசாக்கின் வழிகாட்டலின் கீழ் இந்த டெனிஸ் மைதான வளாகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பெண்கள் சுகநல நிலையம் திறப்பு!

சிவபூமி அறக்கட்டளை, யாழ். போதனா வைத்திய சாலை, மருத்துவ பீடம் என்பன இணைந்து உருவாக்கியுள்ள பெண்கள் சுகநல நிலையத் திறப்பு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இலக்கம் 61, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சிவபூமி இல்லத்தில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் அ.பாலசுப்பிரமணியம் சாவித்திரிதேவி தம்பதியினர் இந்தக் கட்டடத்தை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

# ஆளுநர் கிண்ண குதிரைப் பந்தயம்; முதலிடம் பிடித்தார் ரவிக்குமார்!




(ஆ.ரமேஸ்)

நுவரெலியாவில் இடம்பெற்று வரும் ஏப்பிரல் வசந்தகால நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் ரோயல் டேப் கிளப் ஆகியன இணைந்து வருடாந்தம் நடத்தும் ஆளுநர் கிண்ணத்துக்கான குதிரைப் பந்தயப் போட்டியில் நுவரெலியா ரேஸ்கோஸ் கிராமத்தைச் சேர்ந்த குதிரை ஓட்ட வீரர் லோகேந்திரன் ரவிக்குமார் வெற்றி பெற்றுள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்று வரும் ஏப்பிரல் வசந்தகால கொண்டாட்டங்களில் குதிரை ஒட்ட பந்தைய போட்டி சிறப்பானதாகும்.

உள் நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் இந்த வருடத்துக்கான குதிரை ஒட்டப் போட்டி புதுவருட தினத்தன்று இடம்பெற்றது.

இந்தப் போட்டிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த குதிரைப் பந்தய வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்த வருடத்துக்கான உயரிய விருதான ஆளுநர் விருதுக்கான கிண்ணத்தை போட்டியில் முதலிடம் பெற்ற ரேஸ்கோர்ஸ் கிராமத்தை சேர்ந்த குதிரை ஓட்ட வீரர் லோகேந்திரன் ரவிக்குமார் தனதாக்கி கொண்டார்.

இவருக்காண கேடயம் மற்றும் பரிசுகளை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரிண் பெர்னான்டோ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு வழங்கினர்.



# தெஹிவளை மேம்பால விபத்தில் சாரதிகள் இருவர் படுகாயம்

## புதுவருட தினத்தில் சம்பவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தமிழ், சிங்கள புதுவருட தினத்தன்று தெஹிவளை மேம்பாலத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதிகள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்கிசையில் இருந்து பயணித்த வானும் கொழும்பில் இருந்து பயணித்த கெப் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தெஹிவளைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அனுராத ஹேரத்தின் பணிப்புரையின் பேரில் வீதி போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.லலித் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




### சோழன் உலக சாதனைப் புத்தகத்தில்

# நான்காவது தடவையாக இடம்பிடித்த திருச்செல்வம்!



(த.சுபேசன்)

தென்மராட்சி மட்டுவில் கிராமத்தைச் சேர்ந்த 60 வயதான உலக சாதனையாளரான செ.திருச்செல்வம் கடந்த புதுவருட தினத்தன்று மேலும் ஒர் உலக சாதனையை நிலைநாட்டி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் நான்காவது உலக சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

2600 கிலோ கிராம் எடை கொண்ட உழவு இயந்திரத்தை கழுத்தில் கயிறு கட்டி பின்புறமாக 50 மீற்றர் தூரம் இழுத்து அவர் இந்தச் சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம், முற்றவெளியில் இடம்பெற்ற சாதனை நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சாதனையாளரை பாராட்டியிருந்தார்.

மேலும் சோழன் உலக சாதனைப் புத்தகக் குழுவினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உலக சாதனையாளர் திருச்செல்வம் இதற்கு முன்னர் தனது தாடி மற்றும் தலை முடிகளின் உதவியுடன் கனரக வாகனங்களை இழுத்து சோழன் உலக சாதனைகளை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உல்லாசப் பிரயாணிகளுக்கு இடையே கயிறிழுத்தல் போட்டி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கையில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில், தமிழ் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு அம்பலாங்கொட அகுறல சரீன் ஜயரெட்ண பௌண்டேசன் விளையாட்டு விழா நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது.

இதன் போது உல்லாசப் பிரயாணிகளிடையே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கயிறு இழுத்தல் போட்டியில் பெண்கள் அணியினர் வெற்றி பெற்றனர்.

இந்த நிகழ்வை கண்டு களிப்பதற்காகப் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

# மட்டக்களப்பு மாணவன் ரஷ்யாவில் சாதனை!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரியில் உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்றுவரும் மட்டக்களப்பைச் சேர்ந்த முருகேந்திரன் குருசாட், ரஷ்யாவின் நோவோசோ பிறிக்ஸ் நகரில் இடம் பெற்ற காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிக்காட்டி நாட்டுக்கும் பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் நடைபெற்ற போட்டியிலும் இந்த மாணவன் தனது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

இவர் கராத்தே போதனாசிரியர்களான எஸ். முருகேந்திரன், இராஜலட்சுமி தம்பதிகளின் புதல்வர் ஆவார்.



# காரைதீவில் கலாசார விளையாட்டு விழா!

**( வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41 ஆவது வருட நிறைவை முன்னிட்டும், புத்தாண்டை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் 26 ஆவது கலாச்சார விளையாட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் றொட்டேரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெறவுள்ள கலாச்சார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளரும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளருமான எந்திரி என் .சிவலிங்கம், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் , கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் யு. சிவராஜா, காரைதீவு பிரதேச செயலாளர் சி. ஜெகராஜன் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் விசேடமாக காரைதீவு விளையாட்டு கழகத்தின் 40 வருடகால வரலாற்றை உள்ளடக்கிய “விபுலவிருட்சம்” என்ற சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

நிகழ்வில் கல்வித்துறை சாதனையாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று கழகச் செயலாளர் எஸ்.கிரிசாந்த் தெரிவித்தார்.



# பொலன்னறுவ மாவட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யுனைட்டட் யூத் இளைஞர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, பொலன்னறுவ மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தர குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும் நிகழ்வு வனதா கடுகாலியாவ வனஜீவி பிரஜா அமைப்பின் மண்டபத்தில் நடைபெற்றது.

பொலன்னறுவை மாவட்ட விவசாய அமைப்புகள் ஒன்றிணைந்து விளையாட்டுக் கழக தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி வி.ஜே.ஜே.வத்தேகம, இந்த மக்கள் சந்திப்பின் போது விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.



பொலன்னறுவ மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதன் போது கண்டறியப்பட்ட சில பிரச்சினைகள் இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு உணவகங்களில் பரிசோதனை



(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் வழிகாட்டலில், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதர்கள் சித்திரை பண்டிகை காலத்தை முன்னிட்டு உணவுகள் கையாளும் நிறுவனங்கள், மீன் விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், உணவு கண்காட்சிகள், மற்றும் சமயஸ்தலங்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

இதன் போது பொது மக்களுக்கும், ஹோட்டல் உரிமையாளர்களுக்கும் உணவு மற்றும் நீரால் பரவக் கூடிய நோய்கள் தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

# மோடியின் சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்ட ஸ்டாலின் அழைப்பு!



சென்னை,ஏப்.16

தமிழர்களை பா.ஜ.க. அரசு செல்லாக் காசாக்கி விடும் என்று முதல் மைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறியிருப்பவை வருமாறு:–

பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டுக்கு ஏற்படப் போகிற பாரதூரமான பாதகம் – தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் இந்தியாவின் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது. தமிழ்நாடு உள்பட மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திய மாநிலங்களைத் தண்டிப்பதற்கு போடப்பட்டிருக்கிற அச்சாரம். புதிய நாடாளுமன்றக் கட்ட டத்தில் 888 பேர் அமரக்கூடிய வகை யில் மக்களவை இருக்கைகள் போடப் பட்டிருப்பது நம் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிற கத்தி.

மக்கள்தொகை கட்டுப்பாட்டைச் சிறப்பாகக் கடைப்பிடித்துள்ள மாநிலங்களுக்குத் தண்டனையும் – கடைப்பிடிக்காத மாநிலங்களுக்கு இரு மடங்காக தொகுதிகளை உயர்த்துவதும் என்ன நியா யம்? சிறப்பாகச் செயல்பட்டமைக்காக நம்மைத் தண்டிப்பது ஜனநாயகத்துக்கு ஆபத்து இல்லையா?

தமிழ்நாட்டின் கோரிக்கைகளை, உரிமைக்குரலை இப்போதே மோடி அரசு மதிப்பதில்லை. அடிப்படை உரிமைகளுக்காகக்கூட உச்சநீதிமன்றத்தை ஒவ்வொரு முறையும் நாடும் நிலைக்குத் தள்ளப்படுகிறோம். இதில், மக்களவையில் நமது பிரதிநிதித்துவம் மேலும் குறைந்தால், தமிழர்களை பா.ஜ.க. அரசு செல்லாக் காசாக்கி விடும்.

வரிப்பகிர்வில் ஏற்கெனவே பாரபட்சமான அநீதியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் உரிமைகளைப் பறித்து, தமிழ்நாட்டின் அறிவார்ந்த குரலை ஒடுக்கி, இரண்டாம் தரக் குடிமக்களாக்கும் சர்வாதிகார மோடி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம். தமிழ்நாட்டின் பலத்தைக் குறைக்கும் மோடியின் அப்பட்டமான சதித்திட்டம். இப்போது விழித்திருக்காவிட்டால் எப்போதும் விடியல் இல்லை.

மோடியின் பா.ஜ.க.வுக்கு வாக்களிப்பதற்கும், எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க.வுக்கு வாக்களிப்பதற்கும் வித்தியாசம் ஒன்றும் இல்லை. ஒருவரும் வெற்றிபெற மாட்டார்கள். மக்களவையில் தமிழ்நாட்டின் பலத்தைக் குறைக்க மாட்டேன் எனத் தேர்தலுக்காகப் பொய்யாகக் கூட மோடி வாக்குறுதி கொடுக்க மாட்டார். இத்தனை வெளிப்படையாகத் தமிழ்நாட்டை அழிக்க நினைக்கும் பா.ஜ.க.வையும், அவர்களின் மறைமுகக் கூட்டாளிகளான அ.தி.மு.க.வையும் புறக்கணிப்போம். பாசிசத்தை வீழ்த்த – ஜனநாயகத்தையும் தமிழ்நாட்டையும் காக்க – இந்தியா கூட்டணிக்கு வாக்களிப்போம். – இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 3 ஆம் உலக போரைத் தடுக்க மோடியால் மட்டுமே முடியுமாம்

## அடித்துக் கூறுகின்றார் அண்ணாமலை

கோவை,ஏப்.16

நாட்டைப் பாதுகாக்க, இறையாண்மையைப் பாதுகாக்க 2024 இல் பிரதமர் மோடியின் தலைமை மிக அவசியமாக உள்ளது என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

கோவை தொகுதிக்குட்பட்ட சூலூரில் பா.ஜ.க. வேட்பாளர் அண்ணாமலை பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

ரஷ்யா – உக்ரைன் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இதற்கு முன்பு சிரியாவில் நடந்த தாக்குதலில் ஈரான் அதிகாரிகள் இறந்தார்கள். ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் நேரடி போர் சூழல் தொடங்கியுள்ளது. இந்தப் போர் நேரத்தில்தான் இந்தியாவின் தலைமை இன்னும் வலிமையாக இருக்க வேண்டும்.

நாட்டைப் பாதுகாக்க, இறையாண்மையைப் பாதுகாக்க 2024இல் பிரதமர் மோடியின் தலைமை மிக அவசியமாக உள்ளது. காரணம் கடினமான ஒரு சூழ்நிலைக்குள் உலகம் சென்று கொண்டிருக்கிறது.

உலகம் முழுவதும் போர்சூழல் நிலவினாலும் மோடி பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை மக்களுக்கு உள்ளது. இப்படிப்பட்ட கடினமான சூழலிலும் 10 ஆண்டுகளில் இந்தியாவை முன்னேறிய நாடாக மோடி உயர்த்தியுள்ளார். மூன்றாம் உலக போர் சூழலை தவிர்க்க முடியும் என்றால் அது மோடி அவர்களால் மட்டுமே முடியும். அனைத்து உலக தலைவர்களிடமும் பேச முடியும் என்றால் அது



மோடியால் மட்டுமே முடியும்.

2029 இல் மோடி உலகத்தினுடைய தலைவராக உருவெடுப்பார். உலகத்தின் முன்னணி நாடாக இந்தியா இருக்கும். பெட்ரோல் விலையை ஜி.எஸ்.டி.க்குள் கொண்டுவர நாங்கள் எப்போதோ அறிவித்து விட்டோம். ஆனால் மாநில அரசுகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

மாநில அரசுக்கு வரும் வருமானம் காணாமல் போகும் என்பதால் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். கடந்த2 ஆண்டுகளில் 15 ரூபாய் முதல் 18 ரூபாய் வரை பெட்ரோல்–டீசல் விலையை குறைத்துள்ளோம். 2014 இல் மோடி இந்தியாவுக்கு தேவைப்பட்டார். 2024 இல் மோடி உலகத்துக்கு தேவைப்படுகிறார். செயற்கையாக மின் தடையை ஏற்படுத்தி, பணப்பட்டுவாடா நடைபெறுகிறது. மாற்றம் வேண்டும் என்பதற்காகவே உங்கள் முன் வேட்பாளராக நிற்கிறேன்.– இவ்வாறு அவர் பேசினார்.



# இஸ்ரேல் மீண்டும் தவறு இழைத்தால் கடும் பதிலடி என ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான்,ஏப்.16

இஸ்ரேல் அரசு மற்றொரு தவறைச் செய்யும் என்றால், ஈரானின் பதிலடி நிச்சயம் மிகக் கடுமையாக இருக்கும் என்று ஈரான் அரசு எச்சரித்து உள்ளது.

சிரியாவில் ஈரான் தூதரகம் தாக்கப்பட்டதற்கு பதிலடியாக, இஸ்ரேல் மீது ஏவுகணைகள், ஆளில்லா விமானங்களை கொண்டு ஈரான் தாக்குதல் நடத்தியது. எனினும், அமெரிக்கா உதவியுடன் தாக்குதலை இஸ்ரேல் முறியடித்தது. இதனால், மத்திய கிழக்கு பகுதியில் போர் ஏற்படுவதற்கான பதற்றம் அதிகரித்து காணப்படுகிறது.

ஈரானை எந்நேரமும் இஸ்ரேல் திருப்பித் தாக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரான் தாக்குதல் நடத்தியதும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, தன்னுடைய மந்திரிசபையுடன் போர் பற்றி கடந்த ஞாயிற்று கிழமை ஆலோசனை நடத்தினார். ஆனால், ஈரான் தாக்குதலுக்கு எப்போது? அல்லது எப்படி? பதிலடி கொடுப்பது என்பது பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என உள்ளூர் ஊடகம் தெரிவிக்கின்றது.

இஸ்ரேலில் இருந்து வெளிவரும் ஹேயோம் பத்திரிகையில், 'ஈரானில் பதற்ற நிலை காணப்படுகிறது. அது அரசாட்சியை பலவீனப்படுத்தி உள்ளது. அதனால், பதிலடி கொடுக்க இஸ்ரேல் தலைவர்கள் அவசரப்பட வேண்டியதில்லை' - எனத் தெரிவித்து உள்ளது.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர், ஈரானின் தலைநகர் தெஹ்ரான் மற்றும் பிற இடங்களில் விமான நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளன. எனினும், இந்த மோதலால், பங்கு சந்தைகள் நேற்று சரிவை சந்தித்திருந்தது.

இந்தச் சூழலில், இஸ்ரேல் பதிலடி தாக்குதல் நடத்தும் முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து கொள்ள வேண்டும் என்று ஈரான் எச்சரித்து உள்ளது. இஸ்ரேல் அரசு மற்றொரு தவறை செய்யும் என்றால், ஈரானின் பதிலடி நிச்சயம் மிக கடுமையாக இருக்கும் என்றும் அது தெரிவித்து உள்ளது.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் எங்களுடைய தூதரகம் மீது கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியே நாங்கள் தொடுத்த தாக்குதல் ஆகும் என ஈரான் தெரிவித்தது.

ஈரான் அதிபர் இப்ராகிம் ரெய்சி கூறும்போது, விளைவுகளை பற்றி எண்ணாத, பொறுப்பற்ற இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு ஒரு வலிமையான பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் நாசர் கனானி கூறும்போது, ஈரான் சமீப மாதங்களாக கட்டுப்பாட்டுடன் உள்ளது. இதனை மேற்கத்திய நாடுகள் பாராட்ட வேண்டும் என்று கூறினார்.

இரு ராணுவ அதிகாரிகள் உள்பட புரட்சிப்படையினர் 7 பேர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின், தற்காப்புக்கான நடவடிக்கையாகவே, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என ஈரான் மீண்டும் வலியுறுத்தி கூறியுள்ளது.

# ஓமனில் கனமழை,பெருவெள்ளம்; இதுவரையில் 17 பேர் உயிரிழப்பு



மஸ்கட்,ஏப்.16

ஓமனில் கடந்த சில நாள்களாக பெய்யும் கனமழையை அடுத்துப் பெருவெள்ளம் ஏற்பட்டு உள்ளது. இதனால், பல இடங்களில் வெள்ள நீர் சூழ்ந்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. குடியிருப்புகள், வீடுகள் முழுவதும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. கார்கள், பைக்குகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன.

பொதுமக்கள் மீட்கப்பட்டு வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், இந்த வெள்ளத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டின் அவசரகால மேலாண்மைக்கான தேசிய கமிட்டி வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

இதில், முசாண்டம், அல் புரைமி, அல் தஹிரா மற்றும் அல் தகிலியா உள்ளிட்ட 5 மாகாணங்களில் பணியாற்றி வரும் தனியார் மற்றும் பொது துறைகளை சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் பணிகளை மேற்கொள்ள அரசு தற்காலிக தடை விதித்து உத்தரவிட்டு உள்ளது.

எனினும், ஓமனில் மஸ்கட் உள்ளிட்ட 6 மாகாணங்களில் அனைத்து பள்ளிகளும் மூடப்படும் என்று அறிவிப்பு வெளியானது. ஓமனின் அதிகாரிகள் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து சில நாட்களுக்கு ஓமனின் வடகிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் மித முதல் கனமழை பெய்ய கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கனடா முரசு
பக்கங்கள் 06
செவ்வாய்க்கிழமை 16/04/2024

## உயிரிழந்தவர் அடையாளம் காணப்பட்டார்

ஒன்ராரியோ, ஏப்ரல் 16
நேற்று முன்தினம் ஏப்ரல் 14ஆம் திகதி வெஸ்டன் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகத்தில் C2



# சூடானில் உள்நாட்டு யுத்தத்திற்கு காரணமானோர் மீது கனடா தடை

ஒன்ராரியோ, ஏப்ரல் 16
சூடானில் ஒரு வருட காலமாக நீடிக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கு காரணமானவர்கள் மீது கனடிய அரசாங்கம் ஏப்ரல் 15ஆம் திகதி தடை விதித்துள்ளது.

சூடானில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துபவர்கள் மீதான தடைகளை கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி அறிவித்தார். C2

# கார்பன் வரி விடயம் தொடர்பில் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் தெரிவிப்பு



ஒன்ராரியோ, ஏப்ரல் 16
கார்பன் வரி தொடர்பில் புதிய ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை எனத் தெரிவித்துள்ள நிலைப்பாட்டில் மாற்றமில்லை ஜெக்மீத் சிங், ஆனால், நுகர்வோர் வரி அதிகரிப்பை தாங்கள் ஆதரிக்கிறாரா என்பதை வெளிப்படையாகக் கூற மறுத்துவிட்டார்.

'எங்கள் நிலைப்பாட்டில் முற்றிலும் மாற்றம் இல்லை, மாசுக்கான விலையை நாங்கள் முற்றிலும் ஆதரிக்கின்றோம்' என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

கடந்த வாரம் வருடாந்த மாநாட்டில் ஆற்றிய உரைக்குப் பிறகு முதல் முறையாக செய்தியாளர்களை சந்தித்த ஜெக்மீத் சிங், எரிபொருளின் மீதான மத்திய அரசாங்கத்தின் நுகர்வோர் வரிவிதிப்பு பற்றிய புதிய ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாடு குறித்து குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார் என அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.



# ரொக்கி மலைகளில் நிலக்கரி சுரங்க சர்ச்சை ஆவணங்களைச் சமர்ப்பிக்க மன்று வலியுறுத்தல்

அல்பேர்ட்டார, ஏப்ரல் 16

அல்பர்ட்டா மாகாண அரசாங்கம் ரொக்கி மலைகளில் நிலக்கரி சுரங்கத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளில் ஆயிரக்கணக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

ஆவணங்களை வழங்குவதற்கான உத்தரவை நீதித்துறை மறுஆய்வு செய்ய வேண்டும் என்ற அரசாங்கத்தின் கோரிக்கையை நீதிபதி கென்ட் டெஸ்கி மறுத்துள்ளார்.

எவ்வளவு முக்கியமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கான பொது முயற்சிகளை நடுநிலையாக்குவதற்கு இந்த ஆவணங்கள் அவசியம் என்று அவர் மாகாணத்தை எச்சரித்துள்ளார்.

# உளவு தொடர்பான விதிகள் குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் விளக்கம்

ஒன்ராறியோ, ஏப்ரல் 16

கனடிய பாதுகாப்புடன் நபர்களின் செயல்பாடுகள் தெளிவான தொடர்பைக் கொண்டிருந்தால் மட்டுமே, குடிவரவுச் சட்டத்தின் உளவு தொடர்பான விதிகளின் கீழ் கனடாவில் இருந்து அவர்கள் வெளியேறுவதனைத் தடுக்க முடியும் என்று மத்திய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உளவுச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த நிறுவனம் ஒன்றில் உறுப்பினர்களாக இருந்தமை தொடர்பில் எத்தியோப்பிய ஆண்கள் அனுமதிக்கப்படாதவர்களாக




அறிவிக்கப்பட்டமை சார்ந்து வெளிவந்த தீர்ப்பிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டம் கனடாவிற்கு எதிராக அல்லது கனடாவின் நலன்களுக்கு முரணான உளவு வேலையில் ஈடுபடும் நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் வெளிநாட்டினரை தடை செய்கிறது.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகளின் உறுப்பினர்களுக்கும் இந்த தடை பொருந்தும்.

'கனடாவின் நலன்களுக்கு எதிரானது' என்ற சொற்றொடரை எவ்வாறு வரையறுப்பது என்பது இரண்டு வழக்குகளிலும் பிரச்சினையாக இருந்தது.

## உயிரிழந்தவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த நபரை டொரன்டோ பொலிஸார் அடையாளங் கண்டுள்ளனர்.

வெஸ்டன் வீதிக்கு கிழக்கே லோரன்ஸ் அவனியு மற்றும் ரோல்ப் ஸ்ட்ரீட் அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவ இடத்தில் துப்பாக்கிப் பிரயோக சத்தம் தொடர்பில் கிடைத்த தொலைபேசி அழைப்பின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் உயிரிழந்தவரின் சடலத்தை கண்டெடுத்துள்ளனர்.

சந்தேகநபர்கள் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



## சூடானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் சூடான் துணை இராணுவத் தளபதி அப்துல் ரஹிம் ஹம்தான் டகாலோ மற்றும் ஜனநாயக ஆட்சியை எதிர்க்கும் இஸ்லாமியக் குழுவை வழிநடத்திய முன்னாள் வெளியுறவு அமைச்சர் அலி கார்த்தி ஆகியோர் அடங்குவர்.

போரிடும் இரு பிரிவினரையும் ஊக்குவிப்பதாக குற்றம் சாட்டி நான்கு நிறுவனங்களுக்கும் ஒட்டாவா தடை விதித்துள்ளது.

இந்த தடையானது சூடானில் அமைதிக்கான பாதையை அமைப்பதற்கு உதவும் என ஒட்டாவாவில் உள்ள சூடானின் முன்னாள் தூதுவர் தெரிவித்துள்ளார்.

'சூடானில் நிகழும் ஒப்பிடமுடியாத பேரழிவைக் கண்டு உலகம் திகைக்க வேண்டும்' என்று சூடானின் முன்னாள் தூதுவர் தாரிக் அபுசாலிஹ் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன்பு, சூடானின் இராணுவக் கிளைகளுக்கிடையேயான நீண்டகால அரசியல் பகை ஆயுத மோதலாக உருவெடுத்தது.

இந்த உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக சூடானில் இருந்து மக்கள் பெருமளவில் இடம்பெயர்வதனை, உலகின் மிகப்பெரிய உள்நாட்டு இடப்பெயர்வு நெருக்கடி என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



# வரி விவரம் தாக்கல் செய்தோருக்கு முதலாவது தவணைக் கொடுப்பனவு

ஒன்ராரியோ, ஏப்ரல் 16

மாரச் மாத நடுப்பகுதிக்கு முன்னர் வரிவிவரம்தாக்கல்செய்தவர்களுக்கான முதல் தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அல்பேர்ட்டா, சசகெச்சுவான், மனிடோபா, ஒன்ராரியோ மற்றும் அட்லான்டிக் நான்கு மாகாணங்களிலும் தகுதி பெற்ற வதிவாளர்களுக்கு ஏப்ரல் 15ஆம் திகதி முதல் தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

குடும்பத்தின் அளவை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள், நியூ பிரன்சுவிக்கில் 190 டொலர் முதல் அல்பேர்ட்டாவில் 450 டொலர் வரை நான்கு பேர் கொண்ட ஒரு பொதுவான குடும்பத்திற்கு இருக்கும்.

கனேடியர்கள் தள்ளுபடியிலிருந்து எவ்வளவு எதிர்பார்க்கலாம் என்பதைக் காட்டும், ஒரு புதிய இணைய மதிப்பீட்டை ஒட்டாவா ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளது.

# பதில் தாக்குதல் நடத்த வேண்டாம்! இஸ்ரேலுக்குக் கனடா ஆலோசனை

ஒன்ராரியோ, ஏப்ரல் 16

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு உதவுமாறு இஸ்ரேலிடம் வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி கோரியுள்ளார்.

ஈரான் முன்னெடுத்த தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளாது பதற்ற நிலையைத் தணிக்க இஸ்ரேல் உதவ வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமையை அங்கீகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேலின் முதன்முறையாக ஈரான் ஏவுகணைத் தாக்குதலை முன்னெடுத்திருந்தது.

இதன்பின்னர் இஸ்ரேல் வெளிவிகார அமைச்சர் இஸ்ரேல் கார்ட்ஷிடம் தொலைபேசியில் அழைத்து, ஈரானுக்கு பதில் தாக்குதல் முன்னெடுக்காதிருக்குமாறு தாம் கோரினார் எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமை மேலும் மோசமடைவதனைத் தடுப்பதற்கு இராஜதந்திர ரீதியாக கனடா நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அமைச்சர் ஜொலி தெரிவித்துள்ளார்.






### ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட்டின் கனவுத் திட்டமான

# நெடுஞ்சாலை 413 இற்கான உடன்படிக்கையில் மத்திய, மாகாண அரசுகள் கையெழுத்திடவுள்ளன

ஒன்ராரியோ, ஏப்ரல் 16

ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் போர்ட்டின் கனவுத் திட்டமான நெடுஞ்சாலை 413இன் முன்னெடுத்துச் செல்வதற்கான உடன்படிக்கையில் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்கள் கையெழுத்திடவுள்ளன.

இந்த திட்டத்தினால் பாதிக்கப்படக் கூடிய அம்சங்கள் தொடர்பில் இரு அரச மட்டங்களுக்கு ஒத்துழைப்புடன் மதிப்பீடு செய்து, முகாமை செய்யவுள் ளதாக ஏப்ரல் 15ஆம் திகதி வெளி யிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் தொடர்பில் இரு அரசு களினதும் இணைந்து செயற் படுவதற் கான ஆற்றலை இந்த உடன் படிக்கை வெளிப்படுத்துவதாக சுற்றுச் சூழல் அமைச்சர் ஸ்டீவன் கில்போல்ட் தெரி வித்துள்ளார். நெடுஞ்சாலை 413 திட்டமானது, சுற்றுச்சூழலுக்கு ஆபத் தான திட்டம் என சுற்றுச்சூழல் ஆர் வலர்கள் இந்த திட்டத்தை விமர்சித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# ஒன்டாரியோ நகர ஏரியில் மூழ்கிய 14 வயதுச் சிறுவனின் சடலம் மீட்பு

## 15 மணி நேரத் தீவிரத் தேடுதலின் பின்னர்

கனடாவின் டொரண்டோ நகரில் 14 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்து இருப்பது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் டொரண்டோ நகரில் அஷ்பிரிட்ஜஸ் பே(யுளாடிசனைபநள டீயல) பூங்காவிற்கு அருகில் உள்ள ஒன்டாரியோ ஏரியில் மூழ்கி இந்த 14 வயது சிறுவன் உயிரிழந்தான்.

முகமது என்று அடையாளம் காணப்பட்ட அந்தச் சிறுவன், தனது நண்பருடன் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் நீந்திக் கொண்டிருந்த போது சிக்கலில் சிக்கினான் என்று கூறப்படுகிறது.

பிரச்சனையை புரிந்து கொண்ட நண்பர் உதவிக்கு நபர்களை அழைக்கவே, பார்வையாளர் ஒருவர் துணிச்சலுடன் அவரைக் காப்பாற்ற முயற்சி செய்து நீருக்குள் சென்றார்.

இருப்பினும், அவர்களது முயற்சிகள் பலனளிக்கவில்லை, பின் அவ்விடத்திற்கு உடனடியாக அவசர கால சேவைகள் வரவழைக்கப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை மாலை தேடுதல் பணி தொடங்கப்பட்டது, ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது பலனளிக்கவில்லை.

காணாமல் போய் சுமார் 15 மணி நேரம் கழித்து திங்கள் காலை 9.00 மணியளவில் முகமதுவின் உடல் நீரில் இருந்து மீட்கப்பட்டது.

இவ்விடயம் இன்னும் விசாரணையில் உள்ளது. டொரண்டோ பொலிஸ் ஆய்வாளர் பிராவிகா(Pravica), சிறுவன் ஏன் தண்ணீரில் இறங்கினார் என்பது தெளிவாக தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கணிக்க முடியாத வசந்த காலத்தில், திறந்தவெளி நீரில் நீந்த வேண்டிய ஆபத்துகள் பற்றிய கடுமையான நினைவூட்டலாக இந்த துயரம் உள்ளது.

ஒன்டாரியோ ஏரியின் நீரோட்டங்கள் மற்றும் வெப்ப நிலைகள் ஏமாற வைப்பனவாக வலுவாகவும் குளிராகவும் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய மற்றொரு சிறுவன் சிறிய பாதிப்புகளுடன் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.






# பலஸ்தீன ஆதரவுப் போராட்டத்தில் ஈடுபட்ட 21 பேர் ஹாலிபெக்ஸ் பகுதியில் கைதாகினர்

கனடாவில் பலஸ்தீன ஆதரவு போராட்டத்தில் ஈடுபட்ட 21 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் ஹாலிபெக்ஸ் பகுதியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹொலிஸ் வீதி மற்றும் டெர்மினால் வீதி என்பனவற்றுக்கு அருகாமையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய 21 பேரை ஹாலிபெக்ஸ் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போராட்ட இடத்திலிருந்து கலைந்து செல்லுமாறு பொலிஸார் விடுத்த அறிவுறுத்தலை ஏற்க மறுத்த காரணத்தினால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போராட்டத்திற்கான உரிமைகளை மதிக்கும் அதேவேளை பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனஒ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீன மக்களுக்கான நிதி உதவிகளை சர்வதேசம் முடக்கக் கூடாது எனப் போராட்டக்காரர்கள் கோரியிருந்தனர்.

# ஒன்றாரியோவில் புதிதாக முந்நூறு ரயில் சேவைகள்

## முதல்வர் டக் போர்ட் அறிவிப்பு



ஒன்றாரியோ மாகாணத்தில் ரயிலில் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுவோருக்கு மகிழ்ச்சியான செய்தியொன்றை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

மாகாண முதல்வர் டக் போர்ட் இந்த விடயத்தை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

புமு வுசயளெவை போக்குவரத்து சேவை வாரந்தம் 300 புதிய ரயில் சேவைகளை ஆரம்பிக்க உள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் இவ்வாறு ரயில் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டின் பின்னர் மாகாணத்தில் அதி கூடிய போக்குவரத்துப் பயணங்கள் இந்த ஆண்டில்தான் அறிமுகம் செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வார இறுதி நாள்களில் 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை போக்குவரத்துச் சேவை முன்னெடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவை குறித்த அறிவிப்பு மில்டனில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தாது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கனடாவில் இளம் வயதினர் அதிகளவில் போதைப் பொருள் பாவனையால் மரணம்

## ரொறன்ரோ பல்கலைக ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

கனடாவில் இளம் வயதினர் அதிகளவில் போதைப் பொருள் பயன்பாட்டினால் உயிரிழந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மிதமிஞ்சிய அளவில் போதை மருந்து பயன்பாட்டினால் 20 மற்றும் 30 வயதுகளை உடையவர்கள் அதிகம் உயிரிழக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இளம் தலைமுறையினரை பாதுகாப்பதற்கு தேவையான கொள்கை வகுப்புக்களில் ஆர்வம் காட்டப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2021ஆம் ஆண்டில் போதைப் பொருள் பயன்பாட்டினால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

மிதமிஞ்சிய அளவிலான போதைப் பொருள் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய இள வயது மரங்களை தடுக்க மாகாண அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரட்டிஷ் கொலம்பியா, ஒன்றாரியோ, குபெக், நியூ பிரவுண்ஸ்விக் மற்றும் நோவா ஸ்கோஷியா உள்ளிட்ட மாகாணங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.